நாள் 01.03.2023.
அ வ எண் 20/2021
வா சா 1 ஜெயராஜ், த/பெ ராசையா நாடார்
சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்
4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் கண்டிகைபேரி குளம் ஆயக்கட்டு விவசாயிகளின் சார்பாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். கண்டிகைபேரிகுளத்தில் எனக்கு விவசாய நிலம் உள்ளதை காட்ட எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லைஎன்ற சொன்னால்சரிதான். கண்டிகைபேரிகுளம் உள்ள இடத்தில் எனக்கு விவசாய நிலம் இருப்பதாகவும் பிராதில் குறிப்பிடவில்லைஎன்று சொன்னால் சரிதான். கண்டிகைபேரிகுளம் விவசாய நிலத்தில்மொத்தம் எத்தனை பேர்கள் இருப்பார்கள் என்றால், 50 முதல் 60 நபர்கள் இருப்பார்கள். கண்டிகைபேரிகுளம் விவசாய சங்கம் உள்ளத ா என்றால், உள்ளது. அந்த விவசாய சங்கத்தில் எத்தனை நபர் உறுப்பினராக உள்ளர்கள் என்றால், 50 அல்லது 60 நபர்கள் உறுப்பினராக இருப்பார்கள். நான் அந்த விவசாய சங்கத்தில் தலைவரோ வேற பொறுப்பிலோ இல்லை என்று சொன்னால் அது தவறு நான் தலைவராக உள்ளேன். நான் தலைவர் என்ற முறையில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விவசாய சங்கத்தின் சார்பாக வழக்கு தாக்கல் செய்ய எழுத்துமூலமாக அனுமதி எனக்கு வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை அனைவரும் சொன்னார்கள் நான் தாக்கல்செய்தேன். கண்டிகைபேரிகுளம் விவசாயம் எவ்வளவு உள்ளது என்றால் 105 ஏக்கா் நஞ்சை நிலம் இருக்கிறது. அவ்வாறு 105 ஏக்கர் நிலம் உள்ளதாக பிராதிலோ அல்லது எனது வாக்குமூலத்திலோ குறிப்பிடப்படவிலலை என்று சொன்னால் சரிதான். கண்டிகைபேரிகுளம் தளவாய்புரம் அனைக்கட்டின் கீழ் வருகிறது என்றால் சரிதான். தளவாய்புரம் அனைக்கட்டில் இருந்து மொத்தம் எத்தனை குளத்திற்கு தண்ணீர செல்கிறது என்றால், சுமார் 45 குளத்தில் இருந்து தண்ணீர செல்கிறது. நான் சொல்லுவது தவறு என்றும் சுமார் 20 குளத்திற்குதான் தளவாய்புரம் அனைக்கட்டில் இருந்து தண்ணீர செல்கிறது என்று சொன்னால் சரியல்ல. ஒவ்வொரு குளத்திற்கும் தண்ணீர பாயவேண்டும் என்று அரசில் ஒரு பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால், இருக்கலாம். தளவாய்புரம் அனைக்கட்டின் கீழ் எத்தனை குளத்திற்கு பாசன தண்ணீர உள்ளது என்று அரசு பதிவேடு எதாவது நான் பார்த்திருக்கிறேனா

என்றால், பார்த்தது இல்லை. என்னுடைய கட்சி படி நல்லபெத்தான்குளத்திற்கு தளவாய்புரம் அனைக்கட்டில் இருந்து தண்ணீா் கிடையாது என்று சொல்லுகிறேன் என்றால ் சரிதான். தளவாய்புரம் அனைக்கட்டில் இருந்து முதன்முதலாக தண்ணீா் திருவேங்கடநாதபுரத்திற்குதான் வரும் என்று சொன்னால் அது தவறு அனையில் இருந்து கீழ் வந்து ஏா்வாடி அருகே தென்கால் வடகால் என்று இரண்டாக பிரிகிறது. அவ்வாறு பிரிவது சம்பந்தமாக அரசு ஆவணம் நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். அது சம்பந்தமாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கண்டிகைபேரிகுளத்திற்கு எந்த திசையில் நல்லபெத்தான்குளம் உள்ளது என்றால், மேற்கு திசையில ் உள்ளது. சாட்சி மறுபடியும் வடமேற்கில ் உள்ளது என்று குறிப்பிட்டாா். நல்லபெத்தான்குளத்தின் பாசன வசதி 12.16.00 ஹெக்டோ் இடம் வரை உள்ளது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு வி தொடா்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.